**R 3071 (page 269)** (தோந்தேடுக்கப்பட்ட பத்திகள்)

# வாயிலும், இருதயத்திலும் தேவ அன்பு

## LOVE OF GOD IN MOUTH AND HEART.

உபாகமம்:11:20

இப்பொழுது சுவிசேஷ யுகத்தின் சபைக்குப் பொருந்துகின்றதும், பின்னர்ச் சீர்பொருந்தபோகும் இஸ்ரயேலருக்குப் பொருந்தப்போகின்றதும், ஆயிர வருட யுகத்தின்
**R3072 : page 271**
சாதகமான நிலைமைகளின் கீழ் ஆபிரகாமின் பிள்ளைகளென ஏற்றுக்கொள்ளப்படப் போகின்றவர்களுக்குப் பொருந்தப்போகின்றதுமான இந்தக் கற்பனையின் சாரம், அன்பின் பிரமாணமாகும். "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உன் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு. அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட. அவரது கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய், நீ பலுகுவாய். நீ உடைமையாகக் கொள்ளப்போகும் நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசிவழங்குவார்" (உபாகமம் 30:16; திருவிவிலியம்). தேவனுக்கான நமது அன்பானது அவர் விரும்புகிறதற்கும், அங்கீகரிக்கிறதற்கும் ஏதுவானதாய்க் காணப்படவேண்டுமெனில், தேவனுக்கான அன்பானது இருதயத்திலிருந்து - மனமுவந்து தானாய்க் கடந்துவர வேண்டும் என்பதே சரியான கருத்தாகும். "தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களைப்" பிதா நாடிக்கொண்டிருக்கின்றார். அப்படியானால் "நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்று ஏன் மோசே கூறுகின்கிறார்? கட்டளையின் பேரில் காண்பிக்கப்படும் அன்பானது, மனமுவந்து; கடந்து வரும் அன்பின் அளவுக்கு / தரத்திற்கு ஏற்ப காணப்படாது என்றிருக்க, ஏன் தீர்க்கத்தரிசி வாயிலாகக் கர்த்தர் அன்புகூரக் கட்டளையிடுகின்றார்?

தேவன் அருளிடுவதற்குச் சித்தம் கொண்டுள்ளதான ஆசீர்வாதங்களை ஒருவேளை நாம் அனுபவிக்க வேண்டுமானால், நாம் அடைந்தாக வேண்டிய அன்பிற்கான அளவுகோலினை / நிலையை, தேவன் நம்முன் வைக்கின்றார் என்று நாம் பதிலளிக்கின்றோம். நித்திய ஜீவனுக்கான தம்முடைய இந்த நிபந்தனைகளைத் தெள;ளத் தெளிவாய் நம்முன் வைத்திடும் விதத்தில்தான் அவரது கட்டளையிடுதல் காணப்படுகின்றது. முன்னமே சுட்டிக்காண்பிக்கப்பட்டது போன்று அன்பு என்பது வளருகின்ற ஒரு காரியமாகும் மற்றும் அது கடமை-அன்பு வகையிலிருந்து துவங்குகின்றது; அது நாம் கிருபையிலும், அறிவிலும் வளருகையில் படிப்படியாக வளருகின்றதாய் இருக்கின்றது; பின்னர் நன்றியுணர்வாய் விரிவடைகின்றது; பின்னர் மதிப்பாய் மாறுகின்றது; பின்னர் இறுதியில் அதன் அசுசிகள், சுயநலங்கள் யாவற்றையும் மேற்கொண்டு தூய, ஊக்கமான அன்பாகுகின்றது. தம்முடைய குமாரனுடைய மரணத்தின் வாயிலாகத் தாம் திறந்து வைத்துள்ளதான ஜீவனுக்கான வழியினைச் சத்தியத்தில் அணுகுவதற்கான இவ்விதமான பிரயாசங்கள் நம் இருதயங்களில் காணப்பட்டதில், அவர் மகிழ்ச்சியடைந்தார். அவரது தயவினுடைய வெளிச்சத்தின் கீழ் நம்முடைய வளர்ச்சி மற்றும் விருத்தியைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். கர்த்தர் இயேசுவினுடைய புண்ணியத்தின் மூடுதலை நமக்கு அருளிடுவதற்கும் அவர் சித்தமாய் இருந்தார் மற்றும் நம்மைப் பூரணர்களாக எண்ணிக்கொள்வதற்கும் சித்தமாய் இருந்தார் மற்றும் நம்முடைய அன்பு மற்றும் அர்ப்பணிப்பின் ஆரம்பம் துவங்கி நம்மைத் தத்தெடுத்துக்கொள்ளச் சித்தமாய் இருந்தார் மேலும் நாம் நம் ஓட்டத்தை முடிக்கையில், இலக்கை நாம் அடைகையில், நமக்கு அவர் முன்வைத்திட்டதான - பூரண அன்பு - எனும் அளவுகோலை / தரநிலையை நாம் அடைகையில், அவர் நித்திய ஜீவனாகிய ஆசீர்வாதத்தினை நமக்கு அருளிடுவதற்குச் சித்தமாய் இருப்பார் இதையல்லாமல் வேறு எந்த நிபந்தனையின் அடிப்படையிலும் அவரால் நித்திய ஜீவனை அருளிட முடியாது.

---------------------